தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் சென்னை–6

ந.க.எண்.040678 / சி3 / இ1 / 2021 நாள்.29.4.2022

பொருள்: பள்ளிக் கல்வி அரசு/ நகராட்சி உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளில் 01.08.2021 நிலவரப்படி பட்டதாரி ஆசிரியர்கள் பணியாளர் நிர்ணயம் மேற்கொண்டமை மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதல் பணியிடம் தேவையுள்ள பள்ளிகளுக்கு இயக்குநரின் பொதுத் தொகுப்பில் உள்ள ஆசிரியரின்றி உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்து ஆணை வழங்கியது மார்ச்/ஏப்ரல் 2022 மாதத்திற்கான சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை IFHRMS பதிவேற்றம் மேற்கொள்ள அரசு ஆணை (Pay Authorization) வழங்குதல் சார்பு.

பார்வை:

1)தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.040678 / சி3 / இ1 / 2021 நாள்.13.1.2022

2)தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.040678 / சி3 / இ1 / 2021 நாள்.21.4.2022

3)அரசுக் கடித எண்.10496/பக5(1)/2022–1 நாள்.29.4.2022

–0–

01.08.2021 அன்றைய நிலவரப்படி அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதல் தேவை உள்ள பள்ளிகளுக்கு பார்வை–1ல் காணும் செயல்முறைகளின்படி இயக்குநரின் பொதுத் தொகுப்பிலிருந்து பணியிடங்கள் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது.

மேற்படி கூடுதல் தேவை ஏற்படும் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மார்ச் மற்றும் ஏப்ரல் 2022ம் மாதத்திற்கான சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) பார்வை–3ல் காணும் அரசுக் கடிதத்தின் வாயிலாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அரசுக் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவித்திட சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பார்வை–3ல்காணும்
அரசுக் கடித நகல்

ஆணையருக்காக

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்
கடலூர் / கிருஷ்ணகிரி / சேலம் / திருவள்ளூர் / திருவண்ணாமலை / வேலூர் / விழுப்புரம் / கள்ளக்குறிச்சி / இராணிப்பேட்டை

மார்ச் மற்றும் ஏப்ரல் 2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம்
(Pay authorization for the month of March and April 2022)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடித எண்.10496/பக5(1)/2022 - 1, நாள் 29.04.2022**

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – அரசு/ நகராட்சி/ உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளில் 01.08.2021 அன்றைய நிலவரப்படி பட்டதாரி ஆசிரியர்கள் பணியாளர் நிர்ணயம் மேற்கொண்டமை- மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதல் பணியிடம் தேவையுள்ள பள்ளிகளுக்கு – இயக்குநரின் பொதுத் தொகுப்பில் உள்ள ஆசிரியரின்றி உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்து ஆணை வழங்கியது – 3000 பணியிடங்களுக்கு மார்ச் 2022 மற்றும் ஏப்ரல் 2022 மாதங்களுக்கு சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) -சார்பு.

பார்வை: பள்ளிக் கல்வி ஆணையரின் ந.க.எண். 040678/ சி3/இ1/2021, நாள் 21.04.2022.

******

பள்ளிக் கல்வி ஆணையர் தனது கடிதத்தில், 01.08.2021 அன்றைய நிலவரப்படி அரசு / நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடம் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டதில் 2021-22ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் மேற்படி பணியாளர் நிர்ணய கணக்கீட்டின்படி (6-8 ஆம் வகுப்புக்கு 1:35 என்ற விகிதாச்சாரப்படியும் 9-10ம் வகுப்புக்கு 1:40 என்ற விகிதாச்சாரப் படியும்)

கூடுதல் தேவையுள்ள பள்ளிகள் (Need Schools) அதிகளவில் கண்டறியப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

2. மேற்படி கணக்கீட்டின்படி கூடுதல் பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ள பள்ளிகளுக்கு மாணவர்களின் தரமான கல்விக்கு கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் தேவைப்படுவதால் தற்போது பட்டதாரி ஆசிரியர் நிலையில் இயக்குநரின் பொதுத்தொகுப்பில் 4675 ஆசிரியரின்றி உபரி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் இருப்பதால் (ஏற்கனவே பல்வேறு காலக்கட்டங்களில் உபரிப் பணியிடங்கள் இயக்குநரின் பொதுத்தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்டவை). தற்போது, முன்னுரிமை அடிப்படையில் 9 வட மாவட்டங்களுக்கு 3000 பணியிடங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மேற்படி 9 மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கூடுதல் பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் மற்றும் இதரப்படிகள் ஆகியவற்றினை நடைமுறையில் உள்ள IFHRMS மூலமாக பெற்று வழங்க ஏதுவாக தற்போது கூடுதலாக பகிர்ந்தளிக்கப்பட்ட பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணைகளை இணைத்து ஒரே அரசாணையில் அனுமதித்து உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்குறிப்பிட்டுள்ள 3000 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒரே அரசாணையில் அனுமதித்து உரிய ஆணை வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், வெவ்வேறு அரசாணைகளில் தோற்றுவிக்கப்பட்டு, பள்ளிக் கல்வி இயக்குநரின் பொது தொகுப்பில் உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை கூடுதலாகத் தேவைப்படும் பள்ளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு இணைப்பு 1 மற்றும் 2ல் காணும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் 3000 பட்டதாரி ஆசிரியர்களுக்கு (புதிய ஊதிய விகிதம் நிலை-16, ரூ.36,400 – ரூ.1,15,700) மார்ச் 2022 மற்றும் ஏப்ரல் 2022 ஆகிய மாதங்களுக்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக, ஊதியக் கொடுப்பாணை வழங்கப்படுகிறது. மேற்படி ஆசிரியர்களுக்கான மார்ச் 2022 மற்றும் ஏப்ரல் 2022ஆம் மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இக்கடிதம் நிதித் துறையில் அ.சா.எண்.Edu-II/167/ADS(GKT), நாள் 29.04.2022-இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

29/4/22

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு முதன்மைச் செயலாளருக்காக

29/04/2022

<u>நகல்</u>

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6

மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

நிதி(கல்வி-II)துறை , சென்னை-9.

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

இணைப்பு 1

அரசு கடித எண்.10496 / பக 5(1) / 2022 நாள்.29.4.2022

01.08.2021 அன்றைய நிலவரப்படி பகிர்ந்தளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை விவரம்

| Sl. No | District | Total Addl. Need Post | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Tamil | English | Maths | Science | Social | Total |
| 1 | Cuddalore | 50 | 50 | 50 | 50 | 50 | **250** |
| 2 | Krishnagiri | 90 | 50 | 60 | 80 | 80 | **360** |
| 3 | Salem | 60 | 60 | 60 | 80 | 70 | **330** |
| 4 | Thiruvallur | 120 | 70 | 80 | 100 | 100 | **470** |
| 5 | Tiruvannamalai | 100 | 60 | 80 | 150 | 80 | **470** |
| 6 | Vellore | 50 | 40 | 30 | 70 | 70 | **260** |
| 7 | Viluppuram | 80 | 50 | 50 | 80 | 50 | **310** |
| 8 | Kallakurichi | 80 | 50 | 50 | 100 | 70 | **350** |
| 9 | Ranipettai | 30 | 50 | 50 | 50 | 20 | **200** |
| | Grand Total | **660** | **480** | **510** | **760** | **590** | **3000** |

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

/ உண்மை நகல் /

29/4/2022
பிரிவு அலுவலர்
29/4/2022

| வ.எ | பணியிடம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும் மாவட்டம் | பணியிடம் துறைக்கு திரும்ப பெறப்பட்ட பள்ளியின் பெயர் | பணியிடம் துறைக்கு திரும்ப பெறப்பட்ட மாவட்டத்தின் பெயர் | வழங்கப்படும் பணியிடம் மற்றும் பாடம் | பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை விவரம் | கூடுதல் பணியிடம் தேவையுள்ள பள்ளிக்கு வழங்கப்படும் விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 2990 | Villupuram | GHS CHITHALUR | Villupuram | social science | GO MS No.19 School Edn Dept Dt.23.01.2012 | Govt Hr.sec Sithalingamadam Girls |
| 2991 | Villupuram | GHS NINNAIYUR | Villupuram | social science | GO MS No.19 School Edn Dept Dt.23.01.2012 | Govt Hr.sec Thailapuram Co-ed |
| 2992 | Villupuram | GHS PANDUR | Villupuram | social science | GO MS No.294 School Edn Dept Dt.30.11.2000 | Govt Hr.sec Thaiyur Co-ed |
| 2993 | Villupuram | GHS PANAIYANKAL | Villupuram | social science | GO MS No158 School Edn Dept Dt.18.05.2012 | Govt Hr.sec Valavanur Girls |
| 2994 | Villupuram | GHS VADATHORASALUR | Villupuram | social science | GO MS No.174 School Edn Dept Dt18.07.2017 | Govt Hr.sec Valavanur Boys |
| 2995 | Villupuram | GHSS, BRAMMAKUNDAM | Villupuram | social science | GOMS NO .193 School Edn Dept. Dt : 02.12.2011 | Govt Hr.sec Vanur Co-ed |
| 2996 | Villupuram | GHSS, MARAKKANAM | Villupuram | social science | GOMS NO .761 School Edn Dept. Dt : 16.05.1970 | Govt Hr.sec Veedur Co-ed |
| 2997 | Villupuram | GHS, MUTHALIYARKUPPAM | Villupuram | social science | GOMS NO .761 School Edn Dept. Dt : 16.05.1970 | Govt Hr.sec Veeranamur Co-ed |
| 2998 | Villupuram | GHSS, MURUNGAPAKKAM | Villupuram | social science | GOMS NO .266 School Edn Dept. Dt : 23.12.2011 | Govt Hr.sec Veerapandi Co-ed |
| 2999 | Villupuram | GHSS, THENPAIR | Villupuram | social science | GOMS NO .212 School Edn Dept. Dt : 23.12.2011 | Model Hr.sec Villupuram Girls |
| 3000 | Villupuram | GHSS, THAILAPURAM | Villupuram | social science | GOMS NO .181 School Edn Dept. Dt : 15.11.2011 | Model Hr.sec Villupuram Girls |

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

உண்மை நகல்

29/4/2022

பிரிவு அலுவலர்
29/4/2022